பிரஸார் பாரதி
அகில இந்தியவானொலி, சென்னை
15 06 2024 6 30
சனிக்கிழமை மாலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. இந்தியாவின் ஆக்கப்பூர்வமான கருத்துக்களை உலக அரங்கில் முன் வைப்பதற்கு ஜி-ஏழு உச்சி மாநாடு ஒரு முக்கிய வாய்ப்பாக அமைந்தது என்று பிரதமர் திரு நரேந்திரமோடி கூறியுள்ளார்.
2. விக்கிரவாண்டி சட்டப்பேரவை இடைத்தேர்தலில் போட்டியிடப் போவதில்லை என அஇஅதிமுக அறிவித்துள்ளது.
3. தமிழகத்தில் குற்றச்செயல்களை கட்டுப்படுத்த திமுக அரசு தவறிவிட்டதாக பிஜேபி மாநில தலைவர் திரு அண்ணாமலை கூறியுள்ளார்.
4. சாகித்ய அகாடமியின் பால் புரஸ்கார் விருது திரு யூமா வாசுகி-க்கும், யுவ புரஸ்கார் விருது திரு லோகேஷ் ரகுராமனுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.
5. உலகக்கோப்பை டுவெண்டி – டுவெண்டி கிரிக்கெட் போட்டியில் இன்று இந்தியா - கனடாவை எதிர்கொள்கிறது.

<u>இனி விரிவான செய்திகள் ---</u>

[]<<<>>>[]

இந்தியாவின் ஆக்கப்பூர்வமான கருத்துக்களை உலக அரங்கில் முன் நிறுத்துவதற்கு ஜி-ஏழு உச்சி மாநாடு ஒரு முக்கிய வாய்ப்பாக அமைந்தது என்று பிரதமர் திரு நரேந்திரமோடி கூறியுள்ளார்.

இத்தாலியில் அரசு முறைப்பயணத்தை முடித்துக்கொண்டு இன்று புதுதில்லி திரும்பிய பிரதமர், வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில், எதிர்கால சந்ததியினருக்கு வளமான உலகை உருவாக்கித்தர வேண்டும் என்ற அறைகூவலை இந்தியா உலகத் தலைவர்களிடம் முன் வைத்திருப்பதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இந்திய வெளியுறவுத்துறை அமைச்சகம் ஜி-ஏழு உச்சிமாநாட்டையொட்டி தலைவர்களிடம் உலகளாவிய முக்கிய பிரச்சினைகள் குறித்தும், சமூக பொருளாதார உறவுகளை இந்தியா மேம்படுத்துவதற்கான திட்டங்கள் குறித்தும் ஆலோசித்ததாக அவர் கூறியுள்ளார்.

இத்தாலி பிரதமர் திருமதி ஜியார்ஜியா மெலோனி, பிரிட்டன் பிரதமர் திரு ரிஷி சுனக், பிரான்ஸ் அதிபர் திரு இமானுவேல் மேக்ரோன், உக்ரைன் அதிபர் திரு விளாடிமிர் ஜெலான்ஸ்கி ஆகியோருடன் தாம் இருதரப்பு உறவுகள் குறித்து பேச்சு நடத்தியதையும் பிரதமர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்தியாவின் எரிசக்திக்கான மாற்று திட்டங்கள் குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டதாகவும், எரிசக்தி மாற்றத்திற்கான செயலாக்கம் குறித்தும் விவாதிக்கப்பட்டதாக அவர் கூறியுள்ளார்.

குறைந்த செலவில் அனைவருக்கும் கிடைக்கக்கூடிய வகையிலும், சுற்றுச்சூழலுக்கு உகந்த வகையிலும் எரிசக்தி மாற்றம் கொண்டுவரப்பட வேண்டியதன் அவசியத்தையும் இந்தியா வலியுறுத்தியுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் குறித்து இந்தியாவின் கருத்துக்களை பகிர்ந்து கொண்டதாகக் குறிப்பிட்டுள்ள பிரதமர், அனைவருக்கும் பயன்படும் வகையில் ஆக்கப்பூர்வமாக இதனை பயன்படுத்த வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டுள்ளார்.

சர்வதேச ஒத்துழைப்போடு இந்த தொழில்நுட்பத்தை விரைந்து கொண்டுவர இந்தியா ஆர்வம் கொண்டுள்ளதாகவும் தெரிவித்ததாக திரு நரேந்திரமோடி சமூக வலைதளப்பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

[]<<<>>>[]

சாகித்ய அகாடமியின் பால் சாகித்ய புரஸ்கார் மற்றும் யுவ புரஸ்கார் விருதுகள் இன்று அறிவிக்கப்பட்டுள்ளன.
பால சாகித்ய புரஸ்கார் விருதை 24 எழுத்தாளர்களும், யுவ புரஸ்கார் விருதினை 23 பேரும் பெறுகின்றனர்.

தமிழில் திரு யூமா வாசுகி எழுதிய ‘தன்வியின் பிறந்தநாள்’ நூலுக்கு பால சாகித்ய புரஸ்கார் விருது அறிவிக்கப்பட்டுள்ளது.

திரு லோகேஷ் ரகுராமனின் ‘விஷ்ணு வந்தார்’ என்ற சிறுகதை தொகுப்பு யுவ புரஸ்கார் விருதுக்கு தேர்வாகியுள்ளது.

விருது பெற்றுள்ளவர்களுக்கு தமிழக ஆளுநர் திரு ஆர் என் ரவி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இந்த மதிப்புமிக்க விருதுகள் தமிழ் இலக்கியத்துக்கு அவர்கள் ஆற்றிய சிறப்பான பங்களிப்புகளுக்கு சான்றாகவும், இலக்கிய பாரம்பரியத்தை வளப்படுத்துவதாகவும் உள்ளது என்று ஆளுநர் தமது சமூக வலைதளப்பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

சிறார் மற்றும் இலக்கிய படைப்பாளிகளான இவர்களின் பங்களிப்பு பாராட்டுக்குரியது என்று முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் இன்று வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில் தெரிவித்துள்ளார்.

**[]<<<>>>[]**

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் லட்சினையை மாநில விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு உதயநிதி ஸ்டாலின் இன்று திருப்பூரில் வெளியிட்டார்.

இது தொடர்பாக இன்று வெளியிடப்பட்ட மாநில அரசின் செய்திக் குறிப்பில் தேசிய மற்றும் சர்வதேச அளவில் தமிழ்நாடு பல்வேறு விளையாட்டுக்களில் பெரும் முன்னேற்றம் அடைந்து வருவதை கருத்தில் கொண்டு அதன் தனித்துவத்தை வெளிப்படுத்தும் நோக்கில் தமிழ் நாட்டின் வரைபடத்தை உள்ளடக்கிய புதிய லட்சினை வடிவமைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

**[]<<<>>>[]**

ஏழை எளிய கிராமப்புற மாணவர்களுக்கு எதிராக நீட் தேர்வு உள்ளது என்று தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் திரு செல்வப்பெருந்தகை கூறியுள்ளார்.

கோவையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், ஆள்மாறாட்டம், பணபலம் போன்ற பல்வேறு முறைகேடுகள் நீட் தேர்வில் நடைபெறுவதற்கான சாத்தியக்கூறுகள் அதிகம் உள்ளது என்றும் தெரிவித்தார்.

இந்த முறைகேடுகளை தவிர்க்க வேண்மென்றால் இந்த தேர்வை ரத்து செய்வதுதான் சரியாக இருக்கும் என்று திரு செல்வப்பெருந்தகை கூறினார்.

**[]<<<>>>[]**

விக்கிரவாண்டி சட்டப்பேரவை இடைத்தேர்தலில் போட்டியிடப் போவதில்லை என அஇஅதிமுக அறிவித்துள்ளது.

இது தொடர்பாக அக்கட்சியின் பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிச்சாமி வெளியிட்டுள்ள அறிக்கையில், தமது கட்சி நிர்வாகிகளுடன் நடத்திய ஆலோசனைக்குப் பின் இந்த முடிவு எடுக்கப்பட்டதாகக் கூறியுள்ளார்.

பொதுமக்களை அச்சுறுத்துதல், பணபலம் போன்ற செயல்களில் ஆளும்கட்சியினர் ஈடுபடுவதாகவும், அதிகார துஷ்பிரயோகம் நடைபெறுவதற்கான வாய்ப்புகள் இருப்பதாலும் இந்த தேர்தலில் தங்கள் கட்சி போட்டியிடாது என்றும் திரு எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

**[]<<<>>>[]**

விக்கிரவாண்டி சட்டப்பேரவைத் தொகுதி இடைத்தேர்தலில் தேசிய ஜனநாயக கூட்டணியின் சார்பில் பாமக மாநில துணைத்தலைவர் திரு சி அன்புமணி போட்டியிடுவார் என அக்கட்சி அறிவித்துள்ளது.

இதற்கான அறிவிப்பை அக்கட்சியின் நிறுவனர் மருத்துவர் ச ராமதாசு வெளியிட்டுள்ளார்.

**[]<<<>>>[]**

தமிழகத்தில் குற்றச்செயல்களை கட்டுப்படுத்த திமுக அரசு தவறிவிட்டதாக பிஜேபி மாநில தலைவர் திரு அண்ணாமலை கூறியுள்ளார்.

இது தொடர்வாக அவர் இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில், முதியோர், பெண்கள், குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள் அதிகரித்துள்ளதாக தேசிய குற்றப்பதிவேடு ஆவண காப்பகத்தின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாகக் குறிப்பிட்டுள்ளார்.

பொதுமக்கள் கூடும் இடங்கள், பள்ளிக் கல்லூரிகள் மற்றும் காவல் நிலையங்கள் அமைந்துள்ள பகுதிகளில் குற்றங்கள் நடைபெறுவது பொதுமக்களிடையே அச்ச உணர்வை ஏற்படுத்தி இருப்பதாக அவர் கூறியுள்ளார்.

குற்றச்செயல்களையும், போதைப்பொருள் புழக்கத்தையும் உடனடியாக கட்டுப்படுத்த மாநில அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் திரு அண்ணாமலை வலியுறுத்தினார்.

**[]<<<>>>[]**

காவிரி நீரை கர்நாடகத்திடமிருந்து உடனடியாக பெறுவதற்கான நடவடிக்கைகளை மாநில அரசு எடுக்க வேண்டுமென்று தமிழ் மாநில காங்கிரஸ் தலைவர் திரு ஜி கே வாசன் வலியுறுத்தியுள்ளார்.

தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், காவிரி நீர் தமிழகத்தின் உரிமை என்று கூறினார்.

தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு நிலைமை மோசமாக இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

போதைப்பொருள் புழக்கத்தை கட்டுப்படுத்த மாநில அரசு தவறிவிட்டதாகக் குற்றம்சாட்டினார்.

பள்ளிக்கல்லூரிகளில் மாணவர்களிடையே போதைப்பொருள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டியது அரசின் கடமை என்றும் திரு வாசன் தெரிவித்தார்.

நீட் தேர்வு பற்றி குறிப்பிட்ட அவர், இதில் யார் தவறு செய்திருந்தாலும் தண்டிக்கப்பட வேண்டும் என்றும், அரசியல் கூடாது என்றும் திரு ஜி கே வாசன் கூறினார்.

**[]<<<>>>[]**

தமிழகத்தின் ஒரு சில பகுதிகளில் அடுத்த ஐந்து நாட்களுக்கு மிதமான மழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் இயக்குநர் திரு செந்தாமரைக்கண்ணன் தெரிவித்துள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசிய அவர். சென்னை நகரின் ஒரு சில பகுதிகளில் மாலை நேரத்தில் மழை பெய்ய வாய்ப்பு உள்ளதாகக் கூறினார்.

*( சவுண்ட்பைட் - செ க ) --42--- செகண்ட்*

**[]<<<>>>[]**

தருமபுரி மாவட்ட வளர்ச்சிப் பணிகள் குறித்து மாநில வேளாண்துறை அமைச்சர் திரு எம் ஆர் கே பன்னீர்செல்வம் இன்று ஆய்வு மேற்கொண்டார்.

**[]<<<>>>[]**

சேலம் மாநகராட்சியில் 63 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஏரிகள் மறுசீரமைக்கப்பட்டுவ ருவதாக ஆணையர் திரு பாலசந்திரன் தெரிவித்துள்ளார்.

**[]<<<>>>[]**

ராமநாதபுரம் மாவட்டத்திலிருந்து மீன்பிடிக்க சென்ற விசைப்படகு கடலில் கவிழ்ந்ததில் இரண்டு பேர் உயிரிழந்தனர், ஒருவரை தேடும் பணி நடைபெற்று வருகிறது.

**[]<<<>>>[]**

குற்றாலத்தில் அனைத்து அருவிகளிலும் தற்போது நீர்வரத்து சீராக இருப்பதால் சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரித்தள்ளது.

**[]<<<>>>[]**

நாமக்கல் மாவட்டம் ராசிபுரம் வட்டாட்சியர் அலுவலகத்தில் பொதுவிநியோக திட்ட மக்கள் குறைதீர்க்கும் முகாம் இன்று நடைற்றது.

**[]<<<>>>[]**

ஈரோடு மாவட்டம் அந்தியூரில் காவல்துறை சார்பில் போதைப்பொருள் ஒழிப்பு மற்றும் மறுவாழ்வு விழிப்புணர்வு நிகழ்ச்சி இன்று நடைபெற்றது.

**[]<<<>>>[]**

நெல்லை மாவட்டம் திருக்குறுங்குடிநம்பி கோவிலுக்கு இன்று முதல் பக்தர்கள் மற்றும் சுற்றுலா பயணிகள் செல்ல வனத்துறை அனுமதி அளித்துள்ளது.

**[]<<<>>>[]**

உலகக்கோப்பை டுவென்டி – டுவென்டி கிரிக்கெட் போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டத்தில் இந்தியா - கனடாவை எதிர்கொள்கிறது.
ஃபுளோரிடாவில் நடைபெறவுள்ள இப்போட்டி இரவு 8 மணிக்கு தொடங்குகிறது.

**[]<<<>>>[]**

ஆசிய ஜூனியர் துடுப்பு படகு சாம்பியன் போட்டியில் இந்தியா ஒரு தங்கம், இரண்டு வெள்ளிப்பதக்கங்களை வென்றது.

தாய்லாந்தின் **Rayong**–ல் நடைபெற்றுவரும் இப்போட்டியின் 500 மீட்டர் பிரிவில் அர்ஜுன் சிங் தங்கப்பதக்கத்தையும், ஆயிரம் மீட்டர் பிரிவில் வெள்ளிப்பதக்கத்தையும் வென்றார்.

ஆயிரம் மீட்டர் இரட்டையர் பிரிவில் அரவிந்த் வர்மா – ஹர்ஷ் இணை வெள்ளிப்பதக்கத்தை கைப்பற்றியது.

**[]<<<>>>[]**

இத்தாலியில் நடைபெற்று வரும் **Perugia** சேலஞ்சர் டென்னிஸ் இறுதிப் போட்டியில் இந்தியாவின் ஸ்ரீராம் பாலாஜி – ஜெர்மனியின் **Andre Begemann** இணை இன்று அர்ஜெண்டினாவின் **Guido Andreozzi,** மெக்ஸிகோவின் **Reyes varela** இணையை எதிர்கொள்கிறது.

***End of News***